**இவ்வாறு எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளலாம்**

# கொவிட்-19-தடுப்பூசி மற்றும் கர்ப்பமடைதல் குறித்து எனக்கு கேள்விகள் உள்ளன

## நான் கர்ப்பமாக இருந்தால் அல்லது கர்ப்பமடைய விரும்பினால், கொவிட்-19க்கு எதிராகத் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளலாமா?

கர்ப்படைய முன்பாக அல்லது கர்ப்ப காலத்தில் கொவிட்-19-தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுமாறு உங்களுக்கு நாம் பரிந்துரைக்கின்றோம் (கர்ப்பம் தரித்திருக்கையில் 12 வது வாரத்திலிருந்து சிறப்பானது). ஏனென்றால் ஒரே வயதுடைய கர்ப்பம் தரித்திராத பெண்களைவிட, கர்ப்பமுற்றிருக்கும் பெண்களுக்கு கொவிட்-19 கடுமையான பாதிப்புகளை அதிகளவில் ஏற்படுத்துகின்றது. அதேவேளை நீங்கள் கர்ப்பமுற்றிருக்கும் காலத்தில் கொவிட் வைரஸ் தொற்று ஏற்பட்டால், முன்கூட்டியே குழந்தை பிறக்கும் ஆபத்தும் மிகவும் அதிகமாகவுள்ளது.

கர்ப்பமடைய முன்பாக அல்லது கர்ப்ப காலத்தில் கொவிட்-19-தடுப்பூசியை ஏற்றிக்கொள்வது உங்களையும் மற்றும் பிறக்கவிருக்கும் குழந்தையையும் பாதுகாக்கின்றது.

நீங்கள் கர்ப்பமாக இருந்தால் அல்லது கர்ப்பமடைய விரும்பினால், கொவிட்-19-தடுப்பூசி பாதுகாப்பானது. சுவிசில் அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்துத் தடுப்பூசிகளும் மிகக் கவனமாக அவற்றின் பாதுகாப்பு பரிசோதிக்கப்படுவதுடன் எதிர்காலத்திலும் தொடர்ந்து இவ்வாறே கண்காணிக்கப்படும்.

இத் தடுப்பூசி கருத்தரிப்பதில் எவ்வித எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தாது. நீங்கள் இத்தடுப்பூசியை உங்கள் மாதவிடாய் சுழற்சியின் எந்த வேளையிலும் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் தாய்ப்பால் ஊட்டுபவராக இருந்தாலும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம்.





நீங்கள் கர்ப்பமாக இருந்தால் அல்லது கர்ப்பமுறத் திட்டமிட்டால் மற்றும் தடுப்பூசி குறித்து ஏதாவது கேள்விகள் இருந்தால், உங்கள் பெண் வைத்தியர், ஆண் வைத்தியர் அல்லது மருத்துவச்சியிடம் கதைத்துக் கொள்ளுங்கள்.

**foph-coronavirus.ch**

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Swiss Confederation

**Bundesamt für Gesundheit BAG**
**Office fédéral de la santé publique OFSP**
**Ufficio federale della sanità pubblica UFSP**
**Uffizi federal da sanadad publica UFSP**